**O.S.No.421/2017** **D.W.2** **நாள் 21.07.2026**

**சின்னசாமி த.பெ. பிச்சமுத்து**

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சொத்தின் சர்வே எண் 134 ஆகும். அதன் உட்பிரிவு தெரியாது. அந்த நிலத்தின் கிழக்கே பாப்பாத்தி அம்மாள் நிலமும், தெற்கே பாப்பாத்தி அம்மாள் நிலமும், மேற்கே கலியனின் நிலமும், வடக்கே ஓடையும் உள்ளது. தாவாசொத்திற்கு நான்கு புறத்தில் உள்ள நிலங்களின் சர்வே எண் எனக்கு தெரியாது. கலியன் செட்டியார் சொன்னதன் பேரில் தாவாசொத்தின் சர்வே எண் பற்றி தெரிந்து கொண்டேன். தாவா சொத்தைப் பொறுத்து அனுமந்த செட்டியார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியும். அனுமந்த செட்டியாரின் தந்தை பெயர் சின்னையா செட்டியாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அவருடன் பிறந்தவர்களை பற்றியும் எனக்கு தெரியாது. அனுமந்த செட்டியார் அவரது சகோதரர்களுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை பற்றி தெரியும். 1987 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. பாகப்பிரிவினை பத்திரத்தில் 71 சென்ட் நிலத்தை பொருத்தமட்டும் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். மேற்படி 71 சென்ட் நிலத்தில் ராஜாவிற்கு 35 சென்ட் நிலமும், அண்ணாதுரைக்கு 31 சென்ட் நிலமும் ஒதுக்கப்பட்டது. 71 சென்ட் நிலத்திற்காக பாகப்பிரிவினை ஆவணத்தில் என்ன சக்குப்பந்திகள் குறிப்பிட்டு எழுதப்பட்டது என்று எனக்குத் தெரியாது. அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் ராஜாவும், அண்ணாதுரையும் கையெழுத்திட்டு உள்ளார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை ஆவணத்தில் நான் சாட்சியாக கையெழுத்து எதுவும் போடவில்லை. பாகப்பிரிவினை பத்திரம் பற்றி கேள்விப்பட்டு தான் தெரிந்து கொண்டேன். நேரடியாக தெரியாது.

மொட்டையம்மாள் என்பவரை எனக்கு தெரியாது. மணி என்பவரை தெரியும். அவர்களின் பூர்வீக ஊர் ஆசனூர் ஆகும். நான் மேலே சொன்ன 71 சென்ட் நிலம் முழுவதும் மணி என்பவருக்கு பூர்விமாக பாதிக்கப்பட்டது என்றாலும், அதில் அனுமந்த செட்டியாருக்கும், அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் எவ்வித உரிமையும், பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல அனுமந்த செட்டியாருக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ராஜாக்கும், அண்ணாதுரைக்கும் எவ்வித உரிமையும் பாத்தியமும் இல்லை என்றாலும் சரியல்ல. அண்ணாதுரை என்பவர் தனது மகன்கள் பெயருக்கு பத்திரம் எழுதி வைத்துள்ளார். அது என்ன வகையான பத்திரம் என்று எனக்கு தெரியாது. அந்த பத்திரத்திலும் நான் சாட்சியாக கையெழுத்து எதுவும் போடவில்லை. தாவா சொத்தில் இருந்து அரை கிலோ மீட்டர் தள்ளி எனக்கு சொந்தமாக நிலம் உள்ளது. மொட்டை அம்மாளை பற்றி முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஏதேனும் சொல்லி உள்ளேனா என்றால் மொட்டையம்மாளை யார் என்று எனக்குத் தெரியாது.

நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் இரண்டாம் பக்கத்தில் மொட்டையம்மாள் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவரை எனக்கு தெரியாது. தாவா சொத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் கூறிய சக்குபந்திகள் யாவும் தவறானது என்றாலும், பிரதிவாதி அழைத்து வந்து அவர் சொல்லிக் கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.